**பாரிய நீர்ப்பாசன திட்டங்கள்: சில மூன்றாம் உலக அனுபவங்கள்**

இரண்டாம் உலகமகாயுத்தம் முடிவுற்ற பின்னர் மூன்றாம் உலக நாடொன்றில் மேற்குலகின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட முதலாவது பாரிய அபிவிருத்தி திட்டமாக அமெரிக்காவின் உதவியுடன் ஆப்கானிஸ்தானில் மேற்கொள்ளப்பட்ட **கெல்மண்ட் பள்ளத்தாக்கு அபிவிருத்தி திட்டம்** (ர்நடஅயனெ ஏயடடநல ீசழதநஉவ) கருதப்படுகிறது.

1946ல் இதற்கான பிள்ளையார் சுழி போடப்பட்டது. இத்திட்டத்தை கையாள்வதற்காக மொரிசன் கம்பனி (Morribon Kundsen Company) என்ற நிறுவனம், சென் பிரான்ஸிஸ்கோ நகரில் தலைமையகத்தைக் கொண்டு உருவாக்கப்பட்டது. ஆப்கானஸ்தானின் மொத்த நீர் வளத்தில் நாற்பது சதவீதத்தையும் நாட்டின் நிலப்பரப்பில் நாலில் ஒரு பங்கையும் உள்ளடக்கிய பாரிய திட்டமது. இத்திட்டத்தினால் அபிவிருத்தி துரித வளர்ச்சியடையும் என பின்னரே அப்போது கருதப்பட்டது.

ஆனால் இத்திட்டம் பூர்த்தியான பின்னரே அது ஒரு பாரிய ஏமாற்றம் என்பது தெரிய வந்தது.

- 1949ல் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி அத்திட்டத்திற்கு தேவையான சகல இயந்திர உபகரணங்களும், தொழில்நுட்பமும் தொழில் நுட்பவியலாளர்களும், சீமெந்து, உருக்கு போன்ற கட்டட பொருட்களும் அமெரிக்காவிலிருந்தே மிகுந்த விலையில் தருவிக்கப்பட்டன(ர்.). இதன் மூலம் அமெரிக்கா வழங்கிய கடனுதவியில் பெரும்பகுதி அந்நாட்டுக்கே திரும்பிச் சென்றது.
- இத்திட்டத்திற்காக அமெரிக்காவிலே பயிற்சியளிக்கப்பட்ட ஆப்கான் பட்டதாரி மாணவர்கள் பிற்காலத்தில் அமெரிக்காவின் செல்வாக்கு அந்நாட்டில் காலுன்றுவதற்கு பயன்பட்டனர்.
- திட்டமுடிவில் 539,834 ஏக்கர் காணி நீர்ப்பாசன வகதி பெறும் என எதிர்பார்க்கப்பட்டாலும் 170,000 ஏக்கர் மாத்திரமே இத்திட்டத்தினால் பயனடைந்தது. இது எதிர்பார்க்கப்பட்ட பயனின: 31சதவீதமாகும்.
- ஆனால் இத்திட்டத்திற்கான செலவு அந்நாட்டின் மொத்த பட்ஜட்டின் 19சத வீதத்தை ஏப்பமிட்டிருந்தது.

மற்றொரு உதாரணம்:

- மாபெரும் விளம்பரத்தினுடனும் மிகுந்த ஆரவாரத்துடனும் பெருமளவு முதலீட்டுடனும் கர்நாடக மாநில அரசால் ஆரம்பிக்கப்பட்ட **பாரிய நீர்ப்பாசன திட்டமான மலபிரபா திட்டம்** (Μαλαπραβηα Προφεχτ) இப்போது பல பாரிய பிரச்சினைகளை தோற்றுவித்துள்ளது. இத்திட்டத்தின் விளைவுகளால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் போராட்டங்கள் அந்த மாநிலத:தையே அடிக்கடி குலுக்கி வருகின்றன.

இத்திட்டம் பல்வேறு எதிர்ப்புகளுக்கு மத்தியில் வெற்றிகரமாக செய்து முடிக்கப்பட்டது. ஆனால் அதன் பெறுபெறுகளோ எதிர்விளைவை கொண்டு வருவனவாக இருந்தன.

- பல ஆயிரக்கணக்கான விவசாய நிலங்கள் மிகை நீரோட்டத்தால் விவசாயத்திற்கு பொருத்தமற்றவையாகின.
- பாரம்பரிய விவசாயத்தில் ஈடுபட்டு அதுவரை குறைந்த பட்ச திருப்தியுடனாவது கடன்சுமையின்றி வாழ்ந்த விவசாயிகள் இரசாயன பசளை, இரசாயன கிருமி கொல்லி பாவனைக்கு நிர்பந்திக்கப்பட்டதனால் வங்கிகளிடமும் வட்டிக்காரரிடமும்

கடன்பட நேர்ந்துள்ளது. மீளாக்கடனில் மூழ்கியுள்ள இவர்கள் உழைப்பதில் பெரும்பகுதியை வட்டியாக செலுத்திவிட்டு வறுமையில் வாட நேர்ந்துள்ளது. (இலங்கையில் உள்ள பொலன்னறுவை மாவட்டத்தில் பல விவசாயிகள் இதே காரணங்களால் கடன் தொல்லை தாங்க முடியாமல் தற்கொலை செய்து கொண்டுள்ளமை இங்கு நினைவு கூரத்தக்கது).

- வரிசுமை அதிகரித்த நிலமையை மேலும் மோசமடையச்செய்தன.
- இதனால் இங்கு அடிக்கடி விவசாயிகளின் போராட்டங்கள் வெடிக்கின்றன. 1980 மார்ச் மாதம் வரி மறுப்பு - ஒத்துழையாமை இயக்கத்தை முறியடிக்க பொலிசார் முயன்றபோது போராட்டம் வன்செயல் வடிவத்தை எடுத்தது.˙த்திரமுற்ற விவசாயிகள் **நாவல்கண்ட நகரிலிருந்த நீர்ப்பாசன இலகா அலுவலகத்தைக் கைப்பற்றினர். சுமார் 15 ஜீப் வண்டிகள் சேதமாக்கப்பட்டன. அவ்வாண்டில் மாத்திரம் 40 விவசாயிகள் போராட்டத்தின்போது பொலிசாரின் தாக்குதலாலும் துப்பாக்கிப் பிரயோகத்தினாலும் உயிர் துறந்துள்ளனர். ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டனர்.**
- இன்று மூன்றாம் உலகநாடுகள் அனைத்திலும் இத்தகைய பாரிய நீர்ப்பாசன திட்டங்களுக்கெதிராக வலுவான எதிர்ப்பியக்கங்கள் உருவாகி வருகின்றன. அதற்கு நல்லதொரு உதாரணம் இந்தியாவிலே மேற்கொள்ளப்படும் **பாரிய நர்மதா-சர்தர் சரோவர் அணைக்கட்டு திட்டத்திற்கு உலகளாவிய அளவில் அதிகரித்துவரும் எதிர்ப்பியக்கமாகும்:**

இந்த நர்மதா பள்ளத்தாக்கு அபிவிருத்தி திட்டமானது உலகின் மிகப்பெரிய நீர்ப்பாசன திட்டமாக கருதப்படுகின்றது. இது 30 பாரிய, 153 நடுத்தர, 3000 சிறிய அணைக்கட்டுக்களை உள்ளடக்கியுள்ளது. இத்திட்டத்தால் 10லட்சம் மக்கள் இடம் பெயர நேர்ந்துள்ளது. இதில் பூர்வாங்க குடிகளும் அடங்குவர்.

இத்திட்டத்தால் இடம்பெறவுள்ள மக்கள் புலன்பெயர்வு பூர்வீக குடிகளின் அழிவு ஆகிய விடயங்கள் மனித உரிமை அமைப்புக்களின் தீவிர ஈடுபாட்டுக்கு வித்திட்டுள்ள அதேசமயம் இத்திட்டத்தினால் ஏற்படப்போகும் சுற்றாடல், சூழல், காலநிலை மாற்றங்களையிட்டு உலக பாதுகாப்பு இயக்கங்கள் கவலை கொண்டுள்ளன. இவ்வெதிர்ப்ப இயக்கத்தில் மேதாபட்கர் என்ற பெண்மணி முன்னணி வகிக்கிறார். இவரது எதிர்ப்பியக்கம் நாளுக்குநாள் செல்வாக்கு பெற்று வருகின்றது. இதனால் ஜப்பானும் உலக வங்கியும் இத்திட்டத்திற்கான தமது நிதி உதவியை வாபஸ் வாங்கிக் கொணடுள்ளன. ஐரோப்பிய நாடுகளின் ஒன்றியம் கூட இவ் எதிர்ப்பியக்கத்தை ஆதரிக்கத் தொடங்கியுள்ளது.

## <u>பாரிய நீர்ப்பாசன திட்டங்கள் நவகாலனித்துவ சுரண்டலின் ஒரு அம்சம்</u>

இரண்டாம் உலகப்போரின் முடிவில் உருவான நவகாலனித்துவ சுரண்டலின் ஒரு அம்சமாகவே பாரிய நீர்ப்பாசன அபிவிருத்தி திட்டங்கள் திகழ்கின்றன. உலகவங்கி இத்திட்டங்கள் நிகழ்ந்திருக்கின்றன. உலகவங்கி இத்திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்குகின்றன. சில சமயங்களில் இத்திட்டங்களை உலக வங்கி அல்லது அதுபோன்ற சர்வதேச நிதி நிறுவனங்கள் மூன்றாம் உலகநாடுகள் மீது திணித்து ஏற்கும்படி நிர்பந்திக்கின்றன. இத்திட்டங்கள் வரையப்படுவது முதல் நிர்மாணிக்கப்படும்வரை சகல விடயங்களும் பல்தேசிய நிறுவனங்களினாலே கட்டுப்படுத்தப்படுகின்றன. இவற்றில் அம்சங்களை பின்வருமாறு பட்டியலிடலாம்.

- உள்ளூர் அரசியல்வாதிகளும், உயர்மட்ட அதிகாரிகளும் மேல்மட்ட ஆய்வாளர்களும், விஞ்ஞானிகளும் இராட்சத பல்தேசிய நிறுவனங்களும்

www.tamilarangam.net

கூட்டணியமைத்து கொள்ளை லாபமீட்டும் நவீன வர்த்தகமிது. பல்தேசிய நிறுவனங்கள் முதலில் அதிகாரமிக்க சில அரசியல்வாதிகளையும் கொள்கை வகுக்கும் உயர்இடத்திலுள்ள அதிகாரிகளையும் விலைக்கு வாங்கி நாட்டின் அபிவிருத்தி என்ற பெயரில் நவீன உயர்ந்த தொழில்நுட்பங்களையும் நவீன இயந்திரசாதனங்களையும் கொண்டு பாரிய அளவில் மேற்கொள்ளக்கூடிய நீர்ப்பாசன திட்டங்களையும் முன்மொழியச் செய்கின்றன. உலக வங்கி அல்லது அதுபோன்ற சர்வதேச நிறுவனங்களின் நிபந்தனையுடன் கூடிய நிதி உதவி மூலம் நிர்ப்பந்தங்களை மேற்கொண்டு இதனை அந்நாடு ஏற்கும்படி செய்கின்றன.

- சாத்திய ஆய்வு அறிக்கை (Feasiability Study Report) என்பது சாரம்சத்தில் அத்திட்டத்தை எவ்வளவு பிரமாண்டமானதாக ஆக்கி எந்தளவு லாபத்தை அந்த பல்தேசிய நிறுவனத்திற்கு பெற்று கொடுப்பது பற்றிய ஆய்வாகும்.
- அத்திட்டம் பிரேரிக்கப்பட்டு கொள்கை ரீதியில் இணக்கம் காணப்பட்டதும் அதன் சாத்தியம் பற்றிய ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டு திட்ட நகல் வரையப்படும் இவ்வாய்வு வெளிநாட்டு பல்தேசிய நிறுவனம் ஒன்றினால் மேற்கொள்ளப்படும். உள்நாட்டிலுள்ள தலைசிறந்த நிபுணர்கள் புறக்கணிக்கப்பட்டு அத்திட்டத்தை ஆதரிக்கும் விலைக்கு வாங்கப்பட்ட விஞ்ஞானிகள் இவ்வாய்வு குழவில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள். (இலங்கையில் மகாவலி திசை திருப்பும் திட்டம் வரையப்பட்டபோது பேராதனை பல்கலைக்கழகத்தை மையமாகக் கொண்ட பேராசிரியர் விதானகே தலைமையிலான நிபுணர்குழு புறக்கணிக்கப்பட்டதுடன் அவர்களால் முன்வைக்கப்பட்ட உள்ளூர் தொழில்நுட்பத்தை நவீன தொழில்நுட்பத்துடன் இணைத்து எளிமையான முறையில் சுதேச வளங்களையும் மனிதவளத்தையும் பிரதானமாகக் கொண்டு செயற்படுத்தக்கூடிய மாற்றுத்திட்டம் கருத்தில் கொள்ளப்படவே இல்லை. அது மாத்திரமல்ல கொத்மலை அணைக்கட்டு பொல்கொல்லை நீர்வழிச்சுரங்கம் ஆகியவை அமைக்கப்படுவதற்காக தெரிவு செய்யப்பட்ட இடம் அதற்கு பொருத்தமற்றது என அவர்கள் விடுத்த எச்சரிக்கையும் அலட்சியம் செய்யப்பட்டன. அதன் விளைவை இன்று இத்திட்டம் அனுபவிக்கின்றது.
- சுதேச தொழில்நுட்பமும் அனுபவமும் அலட்சியம் செய்யப்படகின்றன. (மிகவும் தொன்மை வாய்ந்த, சிறந்த புராதன நீர்ப்பாசன திட்டத்தை பேணி பாதுகாத்து இன்றும் பயன்படுத்திக் கொண்டிருக்கும் உலகின் ஒரே நாடு என்ற பெருமை இலங்கைக்குக் உண்டு. ஆனால் நீர்ப்பாசனத்திட்டம் எதிலும் சுதேச தொழில்நுட்பம் பயன்படுத்தப்படவில்லை. அப்படி பயன்படுத்தப்பட்டிருந்தால் மிகவும் குறைவான செலவில் செய்து முடிக்கப்பட்ட மிகச் சிறந்த திட்டமாக மகாவலி அபிவிருத்தி திட்டம் அமைந்திருக்கும். சீனாவிலே உள்ளூர் தொழில் நுட்பத்தையும் மனிதவளத்தையும் பயன்படுத்தி செங்கால்வாய் (Ρεδ Χαναλ) திட்டம் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டுள்ளமை இதற்கான நல்ல உதாரணமாகும். தேசிய அபிவிருத்தியில் இத்திட்டங்கள் பொருட்படுத்தத்தக்க பங்களிப்பை நல்கிய போதும் சுற்றாடலுக்கும் சூழலுக்கும் அவற்றால் ஏற்படுத்தப்படும் பாதிப்புக்களையும் பெறப்பட்ட வெளிநாட்டு கடனுக்கு செலுத்தப்படுத்தப்படும் வட்டியையும் கருத்திற் கொண்டால் நீண்டகால நோக்கில் அவை தேசிய அபிவிருத்திக்கு சுமையாகவே அமைகின்றன. அதற்கு பிரதான காரணம் பிரமாண்டத்திற்கு வழங்கப்பட்டும் அதீத முக்கியத்துவமும் விளைவுகளைப் பற்றிய பாராமுகமும் ஆகும்.
- ஒவ்வொரு கட்டத்திலும் பல்தேசிய நிறுவனத்தின் அதீத லாபமே இலக்காகக் கொள்ளப்படுவதாலும் உள்ளூர் தரகர்களுக்கு கணிசமான தொகை செல்வதனாலும் இத்திட்டங்கள் சுண்டைக்காய் கால்பணம் சுமைக்கூலி முக்காப்பணம் என்கிற ரீதியில் அமைகின்றன.
- உலகவங்கி அல்லது அது போன்ற நிறுவனம் வழங்கும் கடனுதவியில் பெரும்பகுதி வெளிநாட்டு பல்தேசிய நிறுவனத்தின் பைக்குகள் போய்விடுகின்றது.

உள்நாட்டில் இல்லாத இராட்சத இயந்திர சாதனங்களுக்கு மிகைவிலை குறித்தும் நிர்மாணப்பணிக்கு தேவையான சீமெந்து உருக்கு போன்ற பொருட்களை விற்றும் தமது தொழில்நுட்பவியலாளர்களின் மிகச்சம்பளம், அவர்களின் இதர செலவுகள் ஆகியவற்றை கணக்கிட்டும் வெளிநாட்டு நிறுவனங்கள் ஒப்பந்த தொகையை உயர்த்திக் கொள்கின்றன.

- அவர்களது உள்ளூர் தரகர்களான அரசியல்வாதிகள், சுதேச கம்பனிகள் விஞ்ஞானிகள் உயர்அதிகாரிகள் ஆகியோர் பெரும் பணக்காரர் ஆகிவிடுகிறார்கள் இவற்றின் பளு மக்கள் மீதே விழுகின்றது. (மகாவலி அபிவிருத்தி அமைச்சராக இருந்த காமினி திசநாயக்க திடீரென இலங்கையின் பெரும் தனவந்தர்களின் ஒருவராக மாறிய மர்மம் அனைவருக்கும் தெரிந்த இரகசியமாகும்.) இத்திட்டத்தின் பிரமாண்டம் விரிவடையும் அளவுக்குத்தான் இவர்களுக்குக் கிடைக்கும் லாபத்தின் அளவும் அதிகரிக்கும் என்கிற நிலமை இருப்பதானால் தேவையற்ற பல அம்சங்கள் இத்திட்டங்களில் சேர்க்கப்படுகின்றன. அதில் பிரதான இடத்தை இத்திட்டங்களுக்காக அமைக்கப்படும் விசாலமான ஆடம்பரமான வீதிகள் வகிக்கின்றன. இதற்கு நல்ல உதாரணம் கொத்மலை நீர்த்தேக்கத்தில் போடப்பட்டிருக்கும் சங்கிலி பாலம் - நாவலப்பிட்டி அகல பாதை இந்த காட்டுவழிப்பாதையை இப்போது யாரும் பொருட்படுத்துவதே இல்லை. பலகோடி ருபாய் செலவில் தேவைக்கு மேலதிகமாக அமைக்கப்பட்ட இப்பாதை பயன்படுத்தப்படாமல் உள்ளது.

பாரம்பரிய விவசாய முறைகளும் உள்ளூர் தொழில் நுட்பங்களும் புறக்கணிக்கப்பட்டு பல்தேசிய நிறுவனங்களின் லாபத்தை தொடர்ச்சியாகப்பெருக்கும் விவசாய முறைகள் இங்கு ஊக்குவிக்கப்படுகின்றன.

இதற்கு கர்னாடக மாநிலத்தின் மலபிரபாதிட்டம் சான்று பகிர்கிறது. புாரம்பரிய விவசாய முறை கைவிடப்பட்டு இன்று கடனாளியாகி வறுமை நிலையில் விவசாயிகள் அல்லல்படுவதை ஏற்கனவே பார்த்தோம். இனி இந்த சர்வதேச அனுபவங்களை மனதிற் கொண்டு தலவாக்கெலை நீர்த்தேக்க திட்டத்திற்கே செல்வோம்.

## <u>பாரிய நீர்ப்பாசன திட்டங்கள் நவகாலனித்துவ சுரண்டலின் ஒரு அம்சம்</u>

இரண்டாம் உலகப்போரின் முடிவில் உருவான நவகாலனித்துவ சுரண்டலின் ஒரு அம்சமாகவே பாரிய நீர்ப்பாசன அபிவிருத்தி திட்டங்கள் திகழ்கின்றன. உலகவங்கி இத்திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்குகின்றது. சில சமயங்களில் இத்திட்டங்களை உலக வங்கி அல்லது அதுபோன்ற சர்வதேச நிதி நிறுவனங்கள் மூன்றாம் உலகநாடுகள் மீது திணித்து ஏற்கும்படி நிர்பந்திக்கின்றன. இத்திட்டங்கள் வரையப்படுவது முதல் நிர்மாணிக்கப்படும்வரை சகல விடயங்களும் பல்தேசிய நிறுவனங்களினாலே கட்டுப்படுத்தப்படுகின்றன. இவற்றின் அம்சங்களை பின்வருமாறு பட்டியலிடலாம்.

- ஒ உள்ளூர் அரசியல்வாதிகளும், உயர்மட்ட அதிகாரிகளும் மேல்மட்ட ஆய்வாளர்களும், விஞ்ஞானிகளும் இராட்சத பல்தேசிய நிறுவனங்களும் கூட்டணியமைத்து கொள்ளை லாபமீட்டும் நவீன வர்த்தகமிது. பல்தேசிய நிறுவனங்கள் முதலில் அதிகாரமிக்க சில அரசியல்வாதிகளையும் கொள்கை வகுக்கும் உயர்இடத்திலுள்ள அதிகாரிகளையும் விலைக்கு வாங்கி நாட்டின் அபிவிருத்தி என்ற பெயரில் நவீன உயர்ந்த தொழில்நுட்பங்களையும் நவீன இயந்திரசாதனங்களையும் கொண்டு பாரிய அளவில் மேற்கொள்ளக்கூடிய

நீர்ப்பாசன திட்டங்களையும் முன்மொழியச் செய்கின்றன. உலக வங்கி அல்லது அதுபோன்ற சர்வதேச நிறுவனங்களின் நிபந்தனையுடன் கூடிய நிதி உதவி மூலம் நிர்ப்பந்தங்களை மேற்கொண்டு இதனை அந்நாடு ஏற்கும்படி செய்கின்றன.

- 
- சாத்திய ஆய்வு அறிக்கை (Feasiability Study Report) என்பது சாராம்சத்தில் அத்திட்டத்தை எவ்வளவு பிரமாண்டமானதாக ஆக்கி எந்தளவு லாபத்தை அந்த பல்தேசிய நிறுவனத்திற்கு பெற்று கொடுப்பது பற்றிய ஆய்வாகும்.
- 
- அத்திட்டம் பிரேரிக்கப்பட்டு கொள்கை ரீதியில் இணக்கம் காணப்பட்டதும் அதன் சாத்தியம் பற்றிய ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டு திட்ட நகல் வரையப்படும். இவ்வாய்வு வெளிநாட்டு பல்தேசிய நிறுவனம் ஒன்றினால் மேற்கொள்ளப்படும். உள்நாட்டிலுள்ள தலைசிறந்த நிபுணர்கள் புறக்கணிக்கப்பட்டு அத்திட்டத்தை ஆதரிக்கும் விலைக்கு வாங்கப்பட்ட விஞ்ஞானிகள் இவ்வாய்வு குழுவில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள். (இலங்கையில் மகாவலி திசை திருப்பும் திட்டம் வரையப்பட்டபோது பேராதனை பல்கலைக்கழகத்தை மையமாகக் கொண்ட பேராசிரியர் விதானகே தலைமையிலான நிபுணர்குழு புறக்கணிக்கப்பட்டதுடன் அவர்களால் முன்வைக்கப்பட்ட உள்ளூர் தொழில்நுட்பத்தை நவீன தொழில்நுட்பத்துடன் இணைத்து எளிமையான முறையில் சுதேச வளங்களையும் மனிதவளத்தையும் பிரதானமாகக் கொண்டு செயற்படுத்தக்கூடிய மாற்றுத்திட்டம் கருத்தில் கொள்ளப்படவே இல்லை. அது மாத்திரமல்ல கொத்மலை அணைக்கட்டு பொல்கொல்லை நீர்வழிச்சுரங்கம் ஆகியவை அமைக்கப்படுவதற்காக தெரிவு செய்யப்பட்ட இடம் அதற்கு பொருத்தமற்றது என அவர்கள் விடுத்த எச்சரிக்கையும் அலட்சியம் செய்யப்பட்டன. அதன் விளைவை இன்று இத்திட்டம் அனுபவிக்கின்றது.
- 
- சுதேச தொழில்நுட்பமும் அனுபவமும் அலட்சியம் செய்யப்படுகின்றன. (மிகவும் தொன்மை வாய்ந்த, சிறந்த புராதன நீர்ப்பாசன திட்டத்தை பேணி பாதுகாத்து இன்றும் பயன்படுத்திக் கொண்டிருக்கும் உலகின் ஒரே நாடு என்ற பெருமை இலங்கைக்குக் உண்டு. ஆனால் நீர்ப்பாசனத்திட்டம் எதிலும் சுதேச தொழில்நுட்பம் பயன்படுத்தப்படவில்லை. அப்படி பயன்படுத்தப்பட்டிருந்தால் மிகவும் குறைவான செலவில் செய்து முடிக்கப்பட்ட மிகச் சிறந்த திட்டமாக மகாவலி அபிவிருத்தி திட்டம் அமைந்திருக்கும். சீனாவிலே உள்ளூர் தொழில் நுட்பத்தையும் மனிதவளத்தையும் பயன்படுத்தி **செங்கால்வாய்** (Ρεδ Χαναλ) திட்டம் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டுள்ளமை இதற்கான நல்ல உதாரணமாகும். தேசிய அபிவிருத்தியில் இத்திட்டங்கள் பொருட்படுத்தத்தக்க பங்களிப்பை நல்கிய போதும் சுற்றாடலுக்கும் சூழலுக்கும் அவற்றால் ஏற்படுத்தப்படும் பாதிப்புக்களையும் பெறப்பட்ட வெளிநாட்டு கடனுக்கு செலுத்தப்படுத்தப்படும் வட்டியையும் கருத்திற் கொண்டால் நீண்டகால நோக்கில் அவை தேசிய அபிவிருத்திக்கு சுமையாகவே அமைகின்றன. அதற்கு பிரதான காரணம் பிரமாண்டத்திற்கு வழங்கப்பட்டும் அதீத முக்கியத்துவமும் விளைவுகளைப் பற்றிய பாராமுகமும் ஆகும்.
- 
- ஒவ்வொரு கட்டத்திலும் பல்தேசிய நிறுவனத்தின் அதீத லாபமே இலக்காகக் கொள்ளப்படுவதாலும் உள்ளூர் தரகர்களுக்கு கணிசமான தொகை செல்வதனாலும் இத்திட்டங்கள் சுண்டைக்காய் கால்பணம் சுமைக்கூலி முக்காப்பணம் என்கிற ரீதியில் அமைகின்றன.
- உலகவங்கி அல்லது அது போன்ற நிறுவனம் வழங்கும் கடனுதவியில் பெரும்பகுதி வெளிநாட்டு பல்தேசிய நிறுவனத்தின் பைக்குகள் போய்விடுகின்றது.

உள்நாட்டில் இல்லாத இராட்சத இயந்திர சாதனங்களுக்கு மிகைவிலை குறித்தும் நிர்மாணப்பணிக்கு தேவையான சீமெந்து உருக்கு போன்ற பொருட்களை விற்றும் தமது தொழில்நுட்பவியலாளர்களின் மிகச்சம்பளம், அவர்களின் இதர செலவுகள் ஆகியவற்றை கணக்கிட்டும் வெளிநாட்டு நிறுவனங்கள் ஒப்பந்த தொகையை உயர்த்திக் கொள்கின்றன.

•

அவர்களது உள்ளூர் தரகர்களான அரசியல்வாதிகள், சுதேச கம்பனிகள் விஞ்ஞானிகள் உயர்அதிகாரிகள் ஆகியோர் பெரும் பணக்காரர் ஆகிவிடுகிறார்கள் இவற்றின் பளு மக்கள் மீதே விழுகின்றது. (மகாவலி அபிவிருத்தி அமைச்சராக இருந்த காமினி திசநாயக்க திடீரென இலங்கையின் பெரும் தனவந்தர்களின் ஒருவராக மாறிய மர்மம் அனைவருக்கும் தெரிந்த இரகசியமாகும்.) இத்திட்டத்தின் பிரமாண்டம் விரிவடையும் அளவுக்குத்தான் இவர்களுக்குக் கிடைக்கும் லாபத்தின் அளவும் அதிகரிக்கும் என்கிற நிலமை இருப்பதானால் தேவையற்ற பல அம்சங்கள் இத்திட்டங்களில் சேர்க்கப்படுகின்றன. அதில் பிரதான இடத்தை இத்திட்டங்களுக்காக அமைக்கப்படும் விசாலமான ஆடம்பரமான வீதிகள் வகிக்கின்றன. இதற்கு நல்ல உதாரணம் கொத்மலை நீர்த்தேக்கத்தில் போடப்பட்டிருக்கும் சங்கிலி பாலம் - நாவலப்பிட்டி அகல பாதை இந்த காட்டுவழிப்பாதையை இப்போது யாரும் பொருட்படுத்துவதே இல்லை. பலகோடி ருபாய் செலவில் தேவைக்கு மேலதிகமாக அமைக்கப்பட்ட இப்பாதை பயன்படுத்தப்படாமல் உள்ளது.

பாரம்பரிய விவசாய முறைகளும் உள்ளூர் தொழில் நுட்பங்களும் புறக்கணிக்கப்பட்டு பல்தேசிய நிறுவனங்களின் லாபத்தை தொடர்ச்சியாகப்பெருக்கும் விவசாய முறைகள் இங்கு ஊக்குவிக்கப்படுகின்றன.

இதற்கு கர்னாடக மாநிலத்தின் மலபிரபாதிட்டம் சான்று பகிர்கிறது. புாரம்பரிய விவசாய முறை கைவிடப்பட்டு இன்று கடனாளியாகி வறுமை நிலையில் விவசாயிகள் அல்லல்படுவதை ஏற்கனவே பார்த்தோம். இனி இந்த சர்வதேச அனுபவங்களை மனதிற் கொண்டு தலவாக்கெலை நீர்த்தேக்க திட்டத்திற்கே செல்வோம்.

**தலவாக்கெல நீர்த்தேக்க திட்டம்: காமினி திசநாயக்காவின் கனவு**

தலவாக்கெல நீர்த்தேக்க திட்டத்தை மகாவலி அபிவிருத்தியின் ஒரு கட்டம் என்பதைவிட காமினி திசநாயக்காவின் மலையக தமிழ்மக்களின் செறிவான பரம்பலை சிதறடிக்கும் இரகசிய திட்டத்தின், உச்ச கட்டம் என்பதே பொருத்தமானதாகும்.

இதற்கொரு நீண்ட பின்னணி உண்டு. காலஞ்சென்ற முன்னாள் மகாவலி அபிவிருத்தி அமைச்சர் காமினி திசநாயக்க நுவரெலியா மாவட்டத்திலுள்ள கொத்மலையில் பிறந்தவர். இது தலவாக்கெலைக்கு அருகில் உள்ள ஒரு சிங்கள கிராமம். இதற்கொரு வரலாறு உண்டு. பேரினவாதிகளால் இன்று சிங்கள தேசியவீரனாக சித்தரிக்கப்படும் துட்டகைமுனு இந்த கிராமத்திற்கு தப்பி ஓடிவந்து ஒளிந்திருந்ததாகவும், இங்கு ஒரு சிங்களப்பெண்ணை திருமணம் செய்து அதன்மூலம் குழந்தைகள் பிறந்ததாகவும், பின்னர் இக்கிராமத்தி லிருந்தே படைதிரட்டி ஏனைய சிற்றரசர்களை வெற்றி கொண்டு இறுதியாக எல்லாளனைக் கொன்று முழு இலங்கைக்கும் அவனே அரசனானதாகவும் ஐதீகக் கதையுண்டு. இதனை இந்தக் கிராமத்தில் உள்ள மேட்டுக்குடியினர் நம்புகின்றனர். அதையிட்டு பெருமை கொள்ளவும் செய்கின்றனர். துட்டகாமினியின் பெயரைத் தாங்கிய காமினி திசநாயக்கா இதற்கு ஒரு படிமேல் போய் தன்னைத்தானே துட்டகைமுனுவின் இரத்தவழித்தோன்றல் எனக் கருதவும், பகிரங்கமாக கூறவும் தொடங்கினார். அவர் கண்ட கனவுகளில் ஒன்றுதான் மலையகத்தின் தமிழர்கள்

www.tamilarangam.net

அடர்த்தியாக வாழும் பகுதிகளில் இனவிகிதாசாரத்தை மாற்றியமைப்பதாகும்: இந்தக்கனவை நிறைவேற்றும் வாய்ப்பு அவருக்கு ஜே.ஆர் ஜெயவர்த்தனாவின் ஆட்சிக்காலத்தில் (1977-90) கிடைத்தது. இலங்கையின் முதலாவது பிரதமர் டீ.எல். சேனநாயக்க காணி, விவசாய அமைச்சராக இருந்தபோது வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிங்கள குடியேற்றங்களை நிறுவி எப்படி தமிழ்பேசும் மக்கள் வாழ்ந்த மண்ணின் இன அடையாளத்தை மாற்றினாரோ அதே காரியத்தை மகாவலி அபிவிருத்தி அமைச்சராக இருந்து கொண்டு காமினி திசநாயக்க மலையகத்தில் செய்தார்.

மகாவலி அபிவிருத்தி திட்டத்தை துரித கதியில் செய்து முடிக்கும் தீர்மானத்தை ஜே.ஆர்.அரசு மேற்கொண்டதும். அதனை அமுல் படுத்துவதற்காக அதிகார சபை ஒன்று அமைக்கப்பட்டது. அதற்கு மகாவலி அபிவிருத்தி என்கிற பெயரில் மகாவலி படுக்கையை சுற்றி வரவுள்ள பகுதிகளையும் நீர்வளத்தை பாதுகாத்தல், நீரேந்து பகுதிகளில் காடு வளர்த்தல், நீரில் மூழ்கும் கிராமங்களில் உள்ள சிங்களவரை மீளக்குடியமர்த்தல் என்கிற பெயரில் சுவீகரிப்பதற்கான விசேட அதிகாரம் அதற்கு வழங்கப்பட்டது. இவ்வதிகாரத்தை காமினி திசநாயக்க முழு அளவில் பயன்படுத்தினார்.

மகாவலி ஆற்றின் பிரதான கிளை தலாவாக்கெல பிரதேசத்தில் உள்ள **டயாகம** பகுதியில் ஊற்றடுத்து தலவாக்கெல வழியாக பாய்ந்தோடுகிறது. அதன் இருமருங்கிலும் பச்சைக்கம்பளம் விரித்தாற்போற் போல தேயிலைத் தோட்டங்கள் விரிந்து கிடக்கின்றன. அவை மலையக தமிழர்களின் வியர்வையாலும் இரத்தத்தாலும் உருவாக்கப்பட்டவை. எனினும் அவை அவர்களின் ஜீவனோபாய ஜன்ம பூமியாக இப்போது மாறியுள்ளன. அங்கே பிறந்து வளர்ந்து விளையாடி அங்கே கோயில் அமைத்து வழிபட்டு அங்கே படித்து அங்கே திருமணம் செய்து அதிலே வேலை செய்து காலம் முழவதும் அங்கே வாழ்ந்து இறந்த பின்னரும் அந்த மண்ணிலே புதைக்கப்படும் மக்கள் சமூகமாக வாழும் அவர்களுக்கு அனைத்தையும் வழங்குவது அந்த ஜன்மபூமிதான். அம்மண்ணை விட்டு வெளியேற்றப்படும் அதே நிமிடம் அவர்களது வாழ்க்கை அடியோடு அஸ்தமனமாகி விடும் அளவிற்கு அவர்களது வாழ்க்கை அம்மண்ணோடு பின்னிப்பிணைந்துள்ளது. இந்த நிதர்சனமான நிலமையை படம்பிடித்து காட்டிய பல சம்பவங்கள் ஸ்ரீமா பண்டார நாயக்கா ஆட்சிக்காலத்தில் (1971-1977) இடம்பெற்றன. காணி சீர்திருத்தம் என்கிற பெயரில் சுவீகரிக்கப்பட்ட பல பெருந்தோட்டங்களில் இருந்து தோட்டத்தொழிலாளர்கள் விரட்டியடிக் கப்பட்டு தெருக்களில் பிச்சைக்காரர்களாக திரிந்தனர். பெருமளவில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றம் மலையக தமிழர் விரட்டியடிக்கப்பட்ட பெருந்தோட்டங்களில் ஸ்தாபிக்கப்பட்டது.

ஜே.ஆரின் ஆட்சிக்காலத்தில் காமினி திசநாயக்க தலைமையில் மலையக தமிழர் வாழ்ந்த ஜன்ம பூமியில் சிங்கள குடியேற்றங்களை நிறுவும் பணி ஒரு புதிய பரிணாமத்தை அடைந்தது. மகாவலி அபிவிருத்தி திட்டம் அவரது நோக்கத்தை நிறைவேற்றும் வலிமை மிக்க அரசியல் கருவியாக பயன்பட்டது. மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட விக்டோரியா நீர்த்தேக்க துணைத்திட்டம் மலையக மக்கள் செறிவாக வாழ்ந்த தெல்தெனிய பிரதேசத்தில் இருந்து அவர்களை பாரிய அளவில் வெளியேற்றியது. இவ்வாறு மலயைக தமிழர் வெளியேற்றப்பட்ட நிலங்கள் யாவும் விக்டோரியா திட்டத்திற்கு பயன்படுத்தப்படவில்லை. மாறாக சுவீகரிக்கப்பட்ட தமிழர்களின் பெருமளவு நிலம் வேறுபணிகளுக்கே பயன்படுத்தப்பட்டது. இவற்றில் கணிசமான நிலம் சிங்கள குடியேற்றத்திற்கு பயன்படுத்தப்பட்டது. நீரேந்து பகுதிகளில் காடு வளர்ப்பதற்காக என்று காரணம் காட்டப்பட்டு தமிழர்கள் வெளியேற்றப்பட்டனர்.

இதிலே வேடிக்கையான ஒரு விடயம் இடம்பெற்றது. இலங்கையில் மிக சிறந்த, விசாலமான **கோல்ப்**(GolF) மைதானம் ஒன்றும் இம்மண்ணிலே அமைக்கப்பட்டது. இவ்வநீதிக்கு எதிராக தோட்டத்தொழிலாளர்கள் கிளர்ந்தெழுந்த

போராட்டம் நடாத்தியபோது நிலமையைச் சமாளிப்பதற்காக காலஞ்சென்ற அமைச்சர் தொண்டமானின் ஒத்துழைப்பு அந்த **கோல்ப்**(GolF) மைதானத்தை அமைக்கும் நிறுவனத்தால் வாங்கப்பட்டது.

இதைவிட மோசமான நிகழ்வுகள் மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் மற்றொரு அங்கமான கொம்மலை நீர் தேக்கத் திட்டம் நிறைவேற்றப்பட்டபோது நிகழ்ந்தன. கொத்மலைப் பகுதி கிராமங்களில் இருந்து தவிர்க்க இயலாத சூழலில் சிங்கள கிராமவாசிகள் வெளியேற்றப்பட்டனர். இவர்களை உரிய முறையில் மீள்குடியேற்றும் பணி செவ்வனே நிறைவேறியது. தோட்டத்தொழிலாளர் இரவோடு இரவாக விரட்டியடிக்கப்பட்டதை போன்ற சமூக அநீதிகள் இங்கு இடம்பெறவில்லை. இழக்கப்பட்ட காணிகளுக்கு உரிய முறையில் நஷ்ட ஈடு வழங்கப்பட்டது. மாற்றீடாக வேறு இடங்களில் காணியும் வீடு கட்டுவதற்கு கடன் உதவியும் வழங்கப்பட்டன. அரசாங்கத்தின் செலவில் அரசவாகனங்களில் அவர்கள் மீள்குடியேற்றப்பகுதிகளுக்கு அனுப்பப்பட்டனர். கொத்மலை நீர்த்தேக்கத் திட்டத்தால் பாதிக்கப்பட்ட சிங்கள கிராமவாசிகளுக்கு வழங்கப்பட்ட நஷ்ட ஈடுபற்றியயோ சலுகைகள் பற்றியோ எவரும் பொறாமைபடத்தேவையில்லை. அவர்களுக்கு இன்னும் அதிகமாகவே வழங்கப்பட்டிருக்கலாம். அதில் தவறில்லை. ஆனால் இங்கு இரு சமூகங்களுக்கும் வெவ்வேறுவிதமான கரிசனை வழங்கப்பட்டமைதான் சுட்டிக்காட்டப்படவேண்டிய விடயமாகும். இதைவிட கொத்மலை நீர்த்தேக்கத்தால் மலையக தமிழர் எவ்வாறு பாதிக்கப்பட்டார்கள் என்பதுதான் பிரதான விடயமாகும். உண்மையில் மலையகத்தமிழர் இத்திட்டத்தால் நேரடியாகப் பாதிக்கப்படவில்லை. ஏனெனில் அத்திட்டம் சிங்கள கிராமங்களிற்கு மத்தியிலேதான் அமைக்கப்பட்டது. ஆனால் அதன் பாதிப்பு செயற்கையான முறையில் மலையக தமிழர் மீது காமினி திசநாயக்காவால் திணிக்கப்பட்டது. எவ்வாறெனில் அத்திட்டத்தை அண்டியிருந்து புஸ்ஸலாவை-கம்பளை பகுதியில் பெருந்தோட்ட காணிகள் சவீகரிக்கப்பட்டு அத்திட்டத்தினால் பாதிக்கப்பட்ட ஒரு பகுதயினருக்கு சிங்களவருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. **ஆறுமுகத்திடம் அபகரித்து அப்புஹாமிக்கு வழங்கும் ,ந்த சமூக அநீதியை எதிர்த்து சில தொழிற்சங்கங்கள் உச்ச நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு கூட சிங்கள நீதிபதிகளால் நிராகரிக்கப்பட்டது.**

இதிலே வேடிக்கை என்னவென்றால் காலஞ்சென்ற அமைச்சர் தொண்டமானுக்கு சொந்தமான தேயிலைத்தோட்டம் **வெவண்டன் இங்குதான் கூப்பிடுதொலைவில் அமைந்துள்ளது. அவரது மாபெரும் தொழிற்சங்கபலத்தையோ, தான் வகித்த அமைச்சர் பதவியைக் கொண்டோ அவ்வநீதியை தடுத்து நிறுத்த அவர் முயலவில்லை. அவர் மௌனமாக ஜே.ஆர் அரசிற்கு தனது விசுவாச ஒத்துழைப்பை வழங்கிக் கொண்டிருந்தார்.**

விக்டோரியா திட்டம், கொத்மலைத்திட்டம் ஆகிய இரு திட்டங்களின் மூலம் இரு தமிழ் குவி மையப்பகுதிகளில் தனது குடியேற்றத் தாக்குதலை வெற்றிகரமாக நிறைவேற்றிய பின்னர் காமினி திசநாயக்க மலையகத் தமிழர் மிக செறிவாக வாழும் மையப்பிரதேசத்தில் தனது இறுதித் தாக்குதலை தொடர முஸ்தீபு அமைத்தார். தலாவக்கலை நீர்த்தேக்கத் திட்டத்தை அமைத்து தமிழ் மக்களின் இனசெறிவை இல்லாமல் செய்வதே அதுவாகும். ஆனால் அது அத்தனை சுலபமான காரியமாக இருக்கவில்லை. அவர் பல்வேறு சவால்களை எதிர் நோக்க நேர்ந்தது.

முதலாவதாக அத்திட்டத்தை தலவாக்கலையில் அமைக்காமல் அதற்கப்பால் சில மைல்கள் தள்ளி வட்டகொட பகுதியில் அமைக்குமாறு சுற்றாடல் நேய அமைப்புக்களும் புவியியலாளர்களும் பலமாக குரல் எழுப்ப தொடங்கினர். அதற்கு காரணம் உலகின் மிக

www.tamilarangam.net

அழகான 25 நீர் வீழ்ச்சிகளில் ஒன்று எனக், கருதப்படும் **சென் கிளயர் நீர் வீழ்ச்சி இலங்கையின் இரண்டாவது உயரம் கூடிய டெவன் நீர் வீழ்ச்சி உட்பட இப்பகுதயில் உள்ள எழு பிரதமான நீர்வீழ்ச்சிகள் முற்றாகவோ பகுதியாகவோ இத்திட்டத்தால் மூழ்கடிக்கப்பட்டால் அதை சுற்றிவவர உள்ள பகுதிகளில் மண்சரிவு அபாயம் அதிகரிக்கும் என்ற நிலமையும் இருந்தது.**

இரண்டாவதாக சிங்கள குடியேற்றத்திற்கு எதிரான போராட்டத்தில் தலைமை பாத்திரம் வகித்த வரலாறு ஒன்று தலவாக்கல பிரதேசத்திற்கு உண்டு. இவ் உத்தேச தலவாக்கல நீர்த்தேக்கத் திட்டம் அமையப்போகும் இடத்தில்தான் தியாகி சிவனுலட்சுமணனின் கல்லறையும் இருக்கிறது. டேவன் தோட்டக் காணியை சுவீகரித்து சிங்களவருக்கு பகிர்ந்தளிக்க அநுரா பண்டாரநாயக்கவும் ஹெக்டர் கொப்பேகடுவையும் மேற்கொண்ட பகீரத பிரயத்தனத்தை தடுத்து நிறுத்துவதற்காக நடத்தப்பட்ட வீரப்போராட்டத்தில் 1977 மே மாதம் 11ம் திகதி பொலிஸாரின் துப்பாக்கி ச்சூட்டுக்கு பலியாகி இவ்வீர இளைஞன் அமரத்துவம் அடைந்தான். அவ்வீரப் போராட்டத்தின் காரணமாக அப்பகுதியில் சிங்கள குடியேற்றத்தை நிறுவமுடியாமல் போனது. அவன் அன்று சிந்திய இரத்தம் இன்றும் மண்சார்ந்த மலையக தேசியவாதத்திற்கு ஈரம் பாய்ச்சிக் கொண்டிருக்கின்றது.

மூன்றாவதாக மலையகத்தின் அரசியல் தலைமை மையமாக தலவாக்கலை - ஹட்டன் பகுதியே திகழ்ந்து வந்திருக்கிறது. மலையகத்தின் முதலாவது தொழிற்சங்கம் நடேச ஐயரால் இப்பகுதியில்தான் உருவாக்கப்பட்டது. அதன் பின்னர் பல தொழிற்சங்கங்களும் வெகுஜன இயக்கங்களும் இங்குதான் ஜனித்தன. பல மலையக தலைவர்கள் இங்கு இருந்ததான் உருவாகினர். முலையக தேசியவாதத்தின் பிதாமகனான இரா.சிவலிங்கம் தலைமையில் உருவான மலையக இளைஞர் முன்னணியும் யாழ் எதிர்ப்பு வாதத்தில் தொடங்கிய மலையக தேசியவாதத்தை பெருந்தேசிய வாதத்திற்கு எதிரான மண்சார்ந்த தேசிய வாதமாக நெறிபடுத்திய மலையக வெகுஜன இயக்கமும் இவற்றின் வழித்தோன்றலாக பிற்காலத்தில் உருவாகிய இன்றைய மலையக மக்கள் முன்னணியும் இம்மண்ணில்தான் விளைந்தன. அது மாத்திரமல்ல சிறிதுகாலம் மலையகத்தில் சண்முகதாசன் தலைமையில் சுடர்விட்டெறிந்த செங்கொடி சங்கம் இப்பகுதியில்தான் பலம் பெற்றுத் திகழ்ந்தது. அனைத்திற்கும் மேலாக தமிழர் மீது ஜே.ஆர் அரசு கட்டவிழ்த்து வன்செயல்கள் வருடம் தோறும் வெடித்தபோது அதற்கு எதிராக ஆயதம் ஏந்தி சிறை சென்ற வீர இளைஞர்கள் பெரும்பாலானோர் இப்பகுதியைச் சேர்ந்தவர்கள். ஜே.ஆர். ஆட்சிக்காலத்தில் அமைச்சர் பதவியை அலங்கரித்துக் கொண்டு மலையக சமூகம் சிங்கள குடியேற்றங்களால் சிதைக்கப்படுவதை தொண்டமான் மௌனமாக பார்த்துக் கொண்டிருப்பதை விமர்சித்துக்கு கொண்டுதான் இன்றைய மலையக முன்னணி 1989ல் உருவானது. அதன் தலைவர் சந்திரசேகரன் தொண்டமானின் இ.தொ.கா விலிருந்து பிரிந்து தனியே பாராளுமன்ற தேர்தலில் உமா மகேஸ்வரனின் புளொட் அமைப்பின் ஆதரவோடு போட்டியிட்ட போது அவர் நடாத்திய தேர்தல் பிரச்சாரத்தில் தலவாக்கலை நீர்த்தேக்கத் திட்டத்திற்கு எதிரான விமர்சனம் கனல் கக்கியது. அப்போது அவர் தலவாக் கலை திட்டம் மலையக தமிழர்களை நீரில் மூழ்கடிக்கும் திட்டம் என மேடைதோறும் முழங்கினார். ஆதனை தடுத்து நிறுத்தத் தவறிய தொண்டமானை வெகுவாகச் சாடினார். அத்தேர்தலின் போது அவர் கைப்பட எழுதி அச்சிட்டு வெளியிடப்பட்ட பிரசுரத்தில் தலவாக்கெல நீர்த்தேக்கத் திட்டம் கடுமையாக விமர்சிக்கப்பட்டிருந்தது. இதே நுவரெலியா மாவட்டத்தில் தான் காமினி திசநாயக்கவும் அப்போது போட்டியிட்டிருந்தார். அவரை சந்திரசேகரனின் பேச்சுக்கள் ஆத்திரமடையச் செய்தன. அவர் இதற்கு பதில் அளித்து மேடைகளில் **நான் வெற்றி பெற்றால் மகாவலியில் வருடம் தோறும் தண்ணி ஓடும் என பேசத்தொடங்கினார்.**

www.tamilarangam.net

எப்படியோ இப்பகுதியில் ஏற்பட்ட எதிர்ப்பியக்கங்களிற்கு முகம் கொடுக்க முடியாமல் தலவாக்கலை திட்டம் பின் போடப்பட்டுக் கொண்டே வந்தது. அதிஷ்டவசமாக காமினி திசாநாயக்காவின் அரசியல் வைரியான பிரேமதாச ஜனாதிபதியாக பதவியேற்றபோது அவர் ஓரம் கட்டப்பட்டார். தலாவக்கல நீர்த்தேக்கத்திட்டம் தற்காலிமாக கைவிடப்பட்டது.

1944ல் சந்திரிகா அரசாங்கம் ஆட்சி கட்டிலில் ஏறியபோது தலவாக்கலை நீர்த்தேக்க திட்டம் அவ்வரசாங்கத்தில் மிகவும் செல்வாக்கு மிக்க அமைச்சராக இருந்த அநுருத்த ரத்வத்தயின் பொறுப்பின் கீழ் வந்தது. அவர் அத்திட்டத்திற்கு மீண்டும் உயிர் கொடுக்க முயன்றார். ஆயினும் வெகுஜன எதிர்ப்பியக்கங்களால் அம்முயற்சி மறுபடியும் பின் தள்ளப்பட்டது. யுத்தத்தில் சிக்கிக் கொண்ட சந்திரிகாவின் அரசிற்கு வேறெந்த அபவிவிருத்தி திட்டத்திலும் கவனம் செலுத்த முடியாமல் போனதனால் தலவாக்கெல நீர் தேக்க திட்டமும் உயிர் பெறவில்லை.

2001ல் மீண்டும் ஐக்கிய தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்துள்ளது. காமினி திசநாயக்க காலமாகிவிட்டாலும் அவரது கனவை நனவாக்க வேண்டும் என அவரது மகன் நவீண் திசநாயக்க உறுதியுடன் இருக்கிறார். அவர் தனது தந்தையின் பாதையில் செல்ல நினைப்பவர்: அவரது தந்தை போட்டியிட்ட அதே நுவரெலியா தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று இப்போது பிரதி அமைச்சராக இருக்கின்றார். தேர்தல் காலத்தில் இவருக்கும் சந்திரசேகரனிற்கும் இடையே இரகசிய உறவுகள் இருந்தன. கடந்த தேர்தலின்போது மூன்ற விருப்பு வாக்குகளில் ஒன்றை தமிழ்ஆதரவாளர்களிடமிருந்து நவீன் திசாநாயக்காவிற்கு சந்திரசேகரன் இரகசியமாக பெற்றுக்கொடுத்தார் என பரவலாகப் பேசப்படுகின்றது. அரசியலில் இரு துருவமாக இருந்த இவ்விருவரது அரசியல் திருமணத்திற்கு பின்னால் ஒரு பெரும்புள்ளி இருக்கிறார். அவர்தான் பிரதமர் ரணிலுக்கு அவரது கட்சியில் அடுத்த சவாலாக இருக்கும் கரு ஜயசூரிய ஆவர். இவரின் அமைச்சின் பொறுப்பில்தான் தலவாக்கலை நீர்த்தேக்கத் திட்டமும் வருகிறது. ஐக்கிய தேசிய கட்சிக்குள் ரணிலுக்கும் கரு சூரியவிற்கும் இடையே நீண்டகாலமாகவே பனிப்போர் ஒன்று நடைபெற்று வருகின்றது. கரு ஜயசூரிய நாட்டின் அடுத்த தலைவராக வருவதற்காக திட்டமிட்டு மிக கவனமாக செயற்பட்டு வருகிறார். அவரது திட்டத்தின் ஒரு கட்டமாக கண்டி சிங்களவர் மத்தியில் செல்வாக்கு உள்ள காமினி திசநாயக்காவின் குடும்ப வாரிசான நவீன் திசநாயக்காவை தனது மகளை திருமணம் செய்து கொடுத்து மருமகனாக்கி கொண்டார்.

நவீன் திசநாயக்கா தனது மாமனாரான கரு ஜயசூரியாவின் நிழலில் தனது தந்தையின் கனவை நனவாக்கி அதன் மூலம் கண்டிச் சிங்களவர் மத்தியில் தானொரு அரசியல் சக்தியாக வளர்ந்துவிட முயல்கிறார். கரு ஜயசூரிய சந்திரசேகருடன் நெருக்கமான உறவை வளர்த்துக் கொண்டார். திரைமறைவில் என்ன நடந்தது எனத்தெரியாது. ஆனால் அதுவரை **தலவாக்கலை நீர்த்தேக்க திட்டத்தை எனது உயிரை கொடுத்தேனும் தடுத்து நிறுத்துவேன் என முழங்கிய சந்திரசேகரன் இப்போது திடீரென அத்திட்டத்தை ஆதரிக்கத் தொடங்கி உள்ளார். அதற்கு காரணமாக நாட்டின் அபிவிருத்திக்கு உதவுவது எமது கடமை என கூறிவருகிறார்.**

ரணிலிற்கு நவீன், ஜயசூரிய இருவரும் முன்னணிக்கு வருவது விருப்பமில்லை. இரகசியமாக இத்திட்டத்தை குழப்ப அவர் சில காரியங்களை செய்து வருகின்றார். அதில் ஒன்றுதான் ஆறுமுகம் தொண்டமானை சந்திரசேகரனுக்கு எதிராக இத்திட்டத்தை எதிர்ப்பதற்கு முடுக்கிவிட்டுள்ளார். இப்போது ஆறுமுகம் தொண்டமானுக்கு திடீரென தலவாக்கலை நீர்த்தேக்கத்திட்டத்தின் எதிர்விளைவுகளப் பற்றிய ஞானம் பிறந்திருக்கின்றது. அவர் களத்திலே தீவிரமாக இறங்கி இருக்கிறார். இத்திட்டத்தை நிறைவேற்ற விடமாட்டேன் என சூளுரைத்தார். மலையகத்தலவர்களின் சந்தர்ப்பவாதம் எப்படி இருந்தாலும் சிங்களத்

தலைவர்களிடம் இருக்கின்ற முரண்பாடுகள தான் தலவாக்கலை மக்களை அந்நீர்த்தேக்கத்திட்டத்தில் இருந்து காப்பாற்றி வருகிறது.

இறுதியாக மலையக தமிழ் தலைவர்கள் மீது நம்பிக்கை இழந்த இளைஞர் அணி ஒன்று அத்திட்டத்திற்கு எதிரான தொண்டர் நிறுவனங்களுடன் இணைந்து தீவிரமாக செயற்பட ஆரம்பித்துள்ளது. இது ஒரு மகிழ்ச்சிக்குரிய அம்சமாகும்.

தலவாக்கெல நீர்த்தேக்க திட்டத்திற்கு எதிரான போராட்டத்திற்கு ஆதரவு நல்குவோரும் அது தொடர்பான அது தொடர்பான கருசனை உடையவர்களும் 1970களில் கனடா கியூபெக் மாநிலத்தில் அமைக்கப்பட்ட அரசியல் நோக்கம் கொண்ட முதலாவது ஜேம்ஸ் குடா நீர்மின்வலுத்திட்டம் (First James Bay hydro elektric Project) கற்றுத் தந்த கசப்பான அனுபவங்களை படிப்பினையாகக் கொள்வது நல்லது.